

கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு மாநில அளவிலான சதுரங்கம், ஓவியம், கட்டுரை, திருக்குறள் ஒப்புவித்தல் ஆகிய போட்டிகள் ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாட்டில் நடைபெற்ற மாநில அளவிலான சதுரங்கம், ஓவியம், கட்டுரை, திருக்குறள் ஒப்புவித்தல் போட்டிகளில் 1600க்கும் மேற்பட்டவர்களும் கலந்து கொண்டனர். போட்டிகளை மாவட்டக் கழகச் செயலாளரும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி துவக்கி வைத்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கினார். நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி அ.தி.மு.க. மாவட்ட மாணவரணி தலைவர் செந்தில்குமார், மாவட்ட மாணவரணி இணை செயலாளர் ஞானசேகர், மடத்துக்குளம் பேரூர் மாணவரணி அமைப்பாளர் மதுபாலன் உள்பட 80க்கும் மேற்பட்டோரும் பி.ஜே.பி.யை சேர்ந்த 30க்கும் மேற்பட்டோரும் கழகத் துணை பொதுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




திமுக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் – தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா தலைமையில் நேற்று நடைபெற்ற காணொலி கூட்டத்தில் கழகத் தலைவர் – முதலமைச்சர் உத்தரவுப்படி, தமிழ்நாடு முழுவதும் திமுக நிர்வாகிகள் பங்கேற்று கழகத்தின் வெற்றியை உறுதி செய்யும் என் வாக்குச் சாவடி வெற்றிச் சாவடி மற்றும் மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்துகின்ற S.I.R பணியையும் கழகத் தகவல் தொழில் நுட்ப அணியின் பங்களிப்பை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என்ற ஆலோசனையை வழங்கினார். இக்கூட்டத்தில் அணியின் இணைச் செயலாளர், ஆலோசகர், மாநில துணை செயலாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### மாமன்ற உறுப்பினர் சம்பத் ஏற்பாடு! கோவை-இடையர்பாளையம்

# 35வது வார்டில் வரிவசூல் மையத்தில் ஒருங்கிணைந்த கட்டடங்கள் தொடக்கவிழா!

## மதியழகன் – குமரேசன் – துரைப்பாண்டியன் – தெய்வானை – கண்ணகி முன்னிலை!

கோவை, டிச.10-

கோவை வடக்கு மாவட்டம் இடையர் பாளையம் பகுதி 35 ஆவது வார்டில் உள்ள கோவை மாநகராட்சியின் வரி வசூல் மையத்தில் உள்ள பகுதியை பெரிய அளவில் விரிவுபடுத்தி, மாநகராட்சி கட்டிடம் மற்றும் மக்கள் படிப்பகம், வரி வசூல் மையம், ஆதார் மையம் உள்ளிட்ட ஒருங்கிணைந்த பகுதியாக ஏற்படுத்தும் நோக்கத்தில், 35வது வார்டின் மாமன்ற உறுப்பினர் நா. சம்பத் இடைவிடா முயற்சியின் பேரில், மாநக ராட்சி உயர் அதிகாரிகளி டம் பேசி ஒப்புதல் பெற்று அதற்கான பணிகளுக்காக இடையர்பாளையம் மாந கராட்சி வரி வசூல் மையத்தை ஒட்டியுள்ள பகுதியில் தொடக்க விழா நடைபெற்றது.

கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொ. ஆ. ரவி அறிவுறுத்த லின் பேரில், இடையர்பா ளையம் பகுதி கழகச் செய லாளர் மதியழகன், மண்டல தலைவி திருமதி தெய்வானை தமிழ்மறை, 35 ஆவது வட்டக் கழக அவை தலைவர் சோ. துரை பாண்டியன், மாவட்ட கொங்கு கட்சி தலைவர் சுபாஷ், 35 ஆவது வட்ட கழகச் செயலாளர் ஆர். குமரேசன், இடையர்பா ளையம் பகுதி கழக துணைச் செயலாளர் திரு மதி கண்ணகி, மாவட்ட நெசவாளர் அணி அமைப் பாளர் நடராசன், 16வது வட்டக் கழக அவை தலை வர் சுப்பிரமணியன் ஆகி யோர் முன்னிலையில் இத்தொடக்க விழா நடை பெற்றது. அனைத்து BLA 2, BLC, BDA, கழக உடன்பி றப்புகள், பாலசுப்பிரமணி யம், சி.பி.எம். துரை, பிரஸ் ஆறுமுகம், அண்ணா நகர் சந்திரலிங்கம், அக்ரோ வாட்டர் சர்வீஸ் சோனைச் சாமி, பெஸ்ட் அன்பு, ரியல் எஸ்டேட் சங்கரபாண்டி யன், சிராஜுதீன், இளை ஞர் அணி சலூன்பாலன், லேப் சிவா, குணா, இந் திரா நகர் நாகராஜ், லலிதா, சுமதி, புஷ்பா, காண்ட்ராக் டர் ராஜேந்திரன் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் மேற்கண்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### மணிமாறன் தென்றல் ஏற்பாடு! தளபதி முருகேசன்-கே,வி,கே,எஸ்,சபரி கார்த்திகேயன்-இரா,நவநீத கிருஷ்ணன் பங்கேற்பு!

# பொள்ளாச்சியில் துணை முதல்வர் பிறந்த நாள் விழா - கருத்தரங்கம்!

## செந்தில் பாலாஜி எம்,எல்,ஏ, வாழ்த்துரை-தி,செந்தில்வேல்-சே,மெ,மதிவதனி கருத்துரை!

பொள்ளாச்சி, டிச.10-

கழக இளைஞர்அணிச் செயலாளர்துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன் னிட்டு கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. இளை ஞர் அணி சார்பில் மாபெ ரும் கருத்தரங்கம் 14.12.2025 ஞாயிற்றுக்கி ழமை மாலை 4 மணிக்கு மீனாட்சி மகால்,மகாலிங் கபுரம், ரவுண்டானா, பொள்ளாச்சியில் நடை பெறுகின்றது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பா ளர் மணிமாறன் தென்றல் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெறும் இக் கருத்த ரங்கில் திராவிடம் 2.0 ஏன்? எதற்கு...? வெல்லட்டும் திராவிடம், வீழட்டும் பாசி சம் என்ற தலைப்பில் சிறப் புரையாற்றுகின்றனர்.

கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தள பதி முருகேசன் தலைமை வகிக்கிறார்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரிகார்த்தி கேயன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

பொள்ளாச்சி வடக்கு நகர செயலாளர் இரா.நவ நீதகிருஷ்ணன், தெற்கு நகர செயலாளர் எம்.அமு தபாரதி, பா.திருமலை ராஜா, வி.ஆர்.நிஷாந்த், கே.சபரி கிருஷ்ணன், சல் மான் நாசர், ச.புவனேஷ், இருகூர் உதயபூபதி, வி.யுவ ராஜ், பொள்ளாச்சி நவீன்,பட்டாள் மணிகண் டன், சபரி முத்துவீரன், பாண்டிதுரை, பாலமுரு கன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கருத்தரங்கில் மேற்கு மண்டல பொறுப் பாளர் செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வாழ்த்துரை வழங்குகிறார்.

திராவிடம் 2.0 ஏன்?எதற்கு..? என்று தலைப்பில் மூத்த ஊடகவி யலாளர் தி.செந்தில் வேல், வெல்லட்ம் திராவிடம் வீழட்டும் பாசிசம் என்ற தலைப்பில் திராவிடர் கழக துணைப் பொதுச்செ யலாளர் சே.மெ.மதிவதனி ஆகியோர் சிறப்புரை யாற் றுகின்றனர்.

நிகழ்ச்சியை தலைமைக் கழக இளம் பேச்சாளர் ச.பூங்கொடி தொகுத்து வழங்குகிறார்.

கத்தரங்கை கே.இ. பிர காஷ், எம்.பி., கே.ஈஸ்வர சாமி எம்.பி.,கழக உயர் நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.கண்ணப் பன்,கழக சட்ட திட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் ஆகி யோர் துவக்கி வைக்கின் றனர்.


இதில் டாக்டர் ஆர். மகேந்திரன், இரா.தமிழ் மணி, திப்பம்பட்டி வே.ஆறுச்சாமி, கே.எம். நாகராஜ், ஜி.ஏ.அதிபதி, டாக்டர் கி.வரதராஜ், பொள்ளாச்சி சித்திக், பனப்பட்டிதின கரன், பொள்ளாச்சி உமாபதி, சியாமளா நவநீதகிருஷ் ணன், மு.க.முத்து, எஸ். கௌதமன், வி.பி.சந்திரசே கர்,ஆ.சந்திரன்,ஏர்போர்ட் எம்.ராஜேந்திரன், ந.கணே சன், கே.வி.சுப்பிம ணியன், ஜெயபிரகாஷ், சி.பொன் னுசாமி, செ.கனிமொழி, குறிச்சி பிரபாகரன், ஏ. ஆர்.வி. சாந்தலிங்ககுமார், பணிக்கம்பட்டி முத்துச்சாமி, ஆச்சிப்பட்டி பாலகிருஷ்ணன், ரகுதுரை ராஜ், கோ.கதிர்வேல், செ. நடராஜ், ரா.மாணிக்க வேல், எஸ்.ஜெயக்குமார், ஜெ.மஞ்சு சௌமியா, சாந் தாமணி வேலுச்சாமி, பி.ஏ.செந்தில்குமார், கே.வி.ஆறுமுகம், தனம் தங்க துரை,விஜயகுமார், அரவிந்த்வசந்தராம் மற் றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், பொள்ளாச்சி நகர நிர்வாகி கள்,

நகராட்சி பேரூராட்சி தலைவர்கள், கோவை தெற்கு மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் கழக அணி தலைவர், துணைத் தலைவர்,அமைப் பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பொள் ளாச்சி நகர் மன்ற உறுப்பி னர்கள், பொள்ளாச்சி நகர வட்டக் கழகச் செயலாளர் கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக, ஒன் றிய, நகர,பேரூர் இளை ஞர் அணி அமைப்பாளர் கள், நகரக் கழக முன்னணி யினர், நகர மாணவரணியி னர், நிகழ்ச்சி ஒருங்கி ணைப்புக் குழுவினர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக பொள் ளாச்சி நகர இளைஞர் அணி துணை அமைப்பா ளர் சு.ஈஸ்வரன் நன்றி கூறு கிறார்.



கோவை வடக்கு மாவட்டம் இடையபாளையம் பகுதி 35 ஆவது வார்டில் உள்ள கோவை மாநகராட்சியின் வரி வசூல் மையத்தில் உள்ள பகுதியை பெரிய அளவில் விரிவுபடுத்தி, மாநகராட்சி கட்டிடம் மற்றும் மக்கள் படிப்பகம், வரி வசூல் மையம், ஆதார் மையம் உள்ளிட்ட ஒருங்கிணைந்த பகுதியாக ஏற்படுத்தும் வகையில் அதற்கான பணிகளுக்கான தொடக்கவிழா, 35வது வார்டின் மாமன்ற உறுப்பினர் நா. சம்பத் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் பகுதி கழகச் செயலாளர் மதியழகன், திருமதி தெய்வானை தமிழ்மறை, சோ. துரைபாண்டியன், சுபாஷ், ஆர். குமரேசன், திருமதி கண்ணகி நடராசன், சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம், காரிமங்கலம் தனியார் மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்"என்ற முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ்,பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.உடன் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர்,கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி,தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், பேரூராட்சி தலைவர்கள் பி.சி.ஆர்.மனோகரன்,பி.கே.முரளி,ஒன்றிய செயலாளர் எம்.வி.டி.கோபால் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பவானி நகரக் கழகச் செயலாளர்

# ப.சி.நாகராசன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.10-

பவானி நகரக் கழகச் செயலாளர் ப.சி.நாகராசன் மறை வுக்கு, கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் விடுத் துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

பவானி நகரக் கழகச் செயலாளர் ப.சி. நாகராசன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வருத்தமுற் றேன்.

நாகராசன் அவர்கள் ஈரோடு மாவட்டக் கழகத்தினரின் அன்பையும் அபரிமிதமான மரியாதையையும் பெற்றி ருந்த ஒப்பற்ற செயல்வீரர் ஆவார். கடந்த மாதம் நான் ஈரோடு மாவட்டத்துக்கு அரசு நலத்திட்ட விழாவில் பங் கேற்கச் சென்றிருந்தபோதும் மிகச் சிறப்பான வரவேற் பினை வழங்கியிருந்தார். நிகழ்ச்சிகளைப் பாங்குடன் ஒருங்கிணைப்பதில் ஆர்வத்துடன் செயல்படும் தளகர்த்த ராகத் திகழ்ந்தவர் நாகராசன் அவர்கள்.

கால்நூற்றாண்டு காலம் பவானி நகரக் கழகச் செயலா ளராகப் பணியாற்றிய நாகராசன் அவர்களுக்குச், சிறந்த நகரக் கழகச் செயலாளர் என்று விருது வழங்கியிருந்த தையும் நெகிழ்ச்சியோடு இவ்வேளையில் நினைவு கூர்கி றேன்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உடன்பிறப்புகளுக் கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரி வித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், சிறு விளையாட்டு அரங்கம் கட்டுமான பணிகளை தொடங்கி வைத்தார் இதனைத் தொடர்ந்து தளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சந்தனப்பள்ளி. 3 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள மினி ஸ்டேடியம் கட்டுமான பணிகளுக்கு மாவட்ட செயலாளர் ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ், தளி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன், அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தனர். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிரிஷ், பொதுக்குழு உறுப்பினர் அப்துல்கலாம், தேன்கனிக்கோட்டை பேரூர் செயலாளர் சீனிவாசன், ஒன்றிய செயலாளர்கள் சீனிவாசலு ரெட்டி, திவாகர், சிரிதர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் மணிவண்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கிருஷ்ணன், முஜாமில்பாஷா, எல்லப்பன், சுமதி, அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இ.வி. ரங்கப்பன்

### டிசம்பர் 10 (2001)



இளம் வயதிலேயே கழகக் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஈரோடு ஒன்றியத்திற்குட்பட்ட ஆர்.என்.புதூர் கிளைக் கழகச் செயலாளராகப் பணியாற்றத் தொடங்கி, 1970 முதல் மூன்று முறை ஈரோடு ஒன்றியக் கழகச் செயலாளராகவும், 1998ல் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

அத்துடன் கோவை–பெரியார் மாவட்ட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் துணைப் பொதுச்செயலாளராகவும் – ஈரோடு நிலவள வங்கித் தலைவராகவும், ஈரோடு மாவட்ட கூட்டுறவு அச்சகத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.